விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 104 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 19 புதன்கிழமை (02.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### புதுமுக மாணவன் மீது தாக்குதல்
## சிரேஷ்ட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதுமுக மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் சிரேஷ்ட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடி வதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத் தடை விதிக் 15

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் மீது தாக்குதல்
### விசாரணையை ஆரம்பித்தது மனித உரிமை ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புதுமுக மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் ஊடகங்களுக்கு 15

### அசாத்திய திறமையால்
## வியக்க வைத்த யாழ்.சிறுமி

(யாழ்ப்பாணம்)



ஆயிரம் தமிழ்ச் சொற்களுக்கு அதன் ஆங்கில அர்த்தங்களைச் சாதாரணமாகக் கூறி இரண்டரை வயதேயான ஜெயகரன் தர்ஷ்விகா என்ற 04

# தேர்தல் நடவடிக்கையை இடைநிறுத்துக
### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தல் நடவடிக்கைகளை இன்று புதன்கிழமை (02) வரை இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த மனுக்களை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முகமது லஃபார் தாஹீர் மற்றும் கே.பி.பிரானந்து ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழுவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சட்டத்தரணி அஜிரா அஸ்வர் தெரிவிக்கையில்,

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் தூய தேசத்திற்கான கட்சிக்கிடையில் 04

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் மரணம்
### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராயில் தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த 45 வயதுடைய ஐயாத்துரை புலேந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 04

## மக்களிடையே பொய்யைப் பரப்பி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம்
### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(மாத்தறை)



மக்களிடையே பொய்யைப் பரப்பியே அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக மாத்தறை கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய 04

### வவுனியாவில் குளத்திலிருந்து
## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை 15

### 01.07.2025 முதல்
### ஓய்வூதியர்களுக்கு என்ன கிடைக்கும்?

அன்பு ஜவஹர்சா
எழுதும்
சிறப்புக் கட்டுரை
நாளை முதல்
உங்கள்
வலம்புரியில்

## ஜூன், ஜூலை மாதங்களில் பேருந்துக் கட்டணம் உயரும்
### தனியார் பேருந்துகள் உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

தற்போது எரிபொருளின் விலை குறைக்கப்பட்டிருப்பினும் ஜூன், ஜூலை மாதங்களில் குறிப்பிடத்தக்களவில் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை என இலங்கை தனியார் பேருந்துகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் விலை 15

### யாழ்.போதனா வைத்தியசாலையில்
## பிறந்த சிசு மரணம்
### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்த ஆண் சிசு ஒன்று, அரை மணி நேரத்தில் மரணமடைந்த நிலையில் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய சிசுவின் உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசசெயலக நிர்வாகக் கிளையில் கலாச்சார உத்தியோகத்தராகவும், ஊழியர் நலன்புரிச்சங்கத் தலைவராகவும் கடமையாற்றும் சிவயோகநாதன் முகுந்தன் அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் சிவயோகநாதன் இந்திராணி



அவர்கள் 01.04.2025 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேசசெயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேசசெயலகம், பருத்தித்துறை.

தோற்றம் 17.03.1947

மறைவு 01.04.2025

(C-2592)

# BEACON STUDY CENTRE

வதிரி கரவெட்டி

## A/L 2027

கணித, உயிரியல் தொழில்நுட்பப் பிரிவுகள்

ஆரம்பம் - 04.04.2025 ( வெள்ளி )
காலை 8.30 மணி

வழமையான ஆசிரியர்கள் நிர்வாகி

(C-2750)

# பகிரங்க ஏல விற்பனை

புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரத் தொகுதி (உழவு இயந்திரம், பெட்டி, நீர்த்தாங்கி, கலப்பை, றொட்டர் உட்பட) பகிரங்க ஏலத்தில் 06.04.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

உழவு இயந்திரத் தொகுதியை ஆலயத்தில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு
**074 328 3356**

ஆலய பரிபாலன சபை,
மடத்துவெளி, புங்குடுதீவு.

SRI LANKA RED CROSS SOCIETY

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவுக் கிளை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான - அறிவிப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவுக் கிளை, 2025 ஆம் ஆண்டிற்கான வழங்குநர் பதிவுக்கான விண்ணப்பங்களை பின்வரும் பிரிவுகளில் அழைக்கிறது:

- ✓ மளிகைப் பொருட்கள்
- ✓ உணவுப் பொருட்கள்
- ✓ காகிதாதிகள் மற்றும் எழுதுபொருள் பொருட்கள்
- ✓ வாகன சுத்திகரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு
- ✓ வாகன சேவை

விண்ணப்ப செயல்முறை:
ஆர்வமுள்ள வழங்குநர்கள் விண்ணப்பப் படிவத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையில் அல்லது மின்னஞ்சல்/ WhatsApp ல் வேண்டுகோளினை விடுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவுக் கிளை, மாங்குளம் சாலை, முல்லைத்தீவு நகரம்
மின்னஞ்சல்: mullaitivebeo@redcross.lk
WhatsApp: 0715972443

சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி: 2025.04.22
பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவுக்கிளை, மாங்குளம் சாலை, முல்லைத்தீவு நகரம், முல்லைத்தீவு முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும் (மின்னஞ்சல் அல்லது WhatsApp ன் ஊடாக அனுப்பபடும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது)

**விசாரணைகளுக்கு: 0212290220, 0715972443**

(C-2591)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.07.1986

உதிர்வு 13.04.2024

## அமரர் கோவிந்தசாமி கல்பனா

(ஆசிரியை, யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாலயம், யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்)

திதி : பூர்வபக்க பஞ்சமி 02.04.2025

எமது குலவிளக்கே!
எங்கேயம்மா சென்றாய்?
வாழ்வில் உன் ஏற்றத்தை
பார்த்து மகிழ்ந்த எம் மகிழ்வை
அடியோடு அழித்துவிட்டான் இறைவன்!
கலங்கிய விழிகளுடன்
தினம் தினம் உன் வருகைக்காக
காத்திருக்கிறோம் எம் செல்ல மகளே!

வண்ணார்பண்ணை
[illegible],
ஆனைக்கோட்டை

உமது ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

(985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கம் தொடர்பில் இலங்கை அவதானம்

## புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**சுமத்திரா தீவுகளுக்கு அருகில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அதன் தாக்கம் காரணமாக இலங்கையில் சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.**

அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கங்கள் நேரடியாக நாட்டைப் பாதிக்காவிட்டாலும் நிலநடுக்கங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம் என பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், உலக அளவில் நில நடுக்க நிலைமைகளைத் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாகவும் புவியியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரி கள் தெரிவித்தனர்.

சமீபத்தில் மியன்மாரில் 7.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத் தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,000ஐ தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் இருப்பதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 8-9 ஆக பதிவாகலாம் என்றும், 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் பலியாகலாம் என்றும் ஜப்பான் அரசாங்கம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# காட்டு யானைகளால் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு கல்விக்கான நிதியுதவி

## ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை தீர்மானம்

(கொழும்பு)

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவது அன்றாட நிகழ்வாக மாறியிருப்பதால் பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஊக்குவிப்பாக நிதியுதவியை வழங்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் கூடிய ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் பாதிக்கப்பட்ட, காயங்களுக்கு உள்ளாகியவர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படுவதோடு, காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் சொத்துச் சேதங்களை எதிர்கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

பிரதேச செயலாளரின் மேற்பார்வைக்கு அமைய நிதியுதவிக்கு தகுதியுடைய குடும்பமாக இருக்க வேண்டும் என்பதுடன், 1 ஆம் வகுப்பு தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் அல்லது க.பொ.த உயர்தரம் வரையில் கல்வி பயிலும் பிள்ளைகள் இருக்கின்ற குடும்பமாக இருப்பதும் இந்த நிதியுதவிக்கான தகுதியாக கருதப்படும்.

2025.01.01 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னரான தினங்களில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்த காரணத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பமாக இருக்க வேண்டும் என்பதோடு தற்போதும் ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் க.பொ.த உயர்தர புலமைப்பரிசு வேலைத்திட்டத்தின் பயனாளியாக இல்லாதிருப்பதும் தகுதியாக கருதப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக 1 ஆம் வகுப்பு முதல் 11 வரையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளையொன்றுக்காக 3,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திற்கும் 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு 5,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திற்கும் நிதியுதவி வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி தமது பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகுதியைப் பூர்த்தி செய்த குடும்பப் பிள்ளைகளின் தகவல்களை பெற்றுக்கொண்டு தமது தனிப்பட்ட மேற்பார்வை மற்றும் பரிந்துரையுடன் குறித்த விண்ணப்பங்களை தாமதமின்றி ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# பாதாள உலகக் கும்பல்களை கட்டுப்படுத்த தயார்!

## பொறுப்பை ஒப்படைத்தால் ஒழித்துக்கட்டுவேன்-சரத் பொன்சேகா



(கொழும்பு)

அரசாங்கம் தன்னிடம் பொறுப்பை ஒப்படைக்கும் பட்சத்தில் பாதாள உலகக் கும்பல்களை ஒழித்துக்கட்டத் தான் தயாராக இருப்பதாக பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா அறிவித்துள்ளார்.

அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக்கும்பல்களை ஒழிப்பது ஒன்றும் பெரிய காரியம் கிடையாது.

அரசாங்கம் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தால் 1500 பேரளவான எண்ணிக்கை கொண்ட இந்த பாதாள உலகக் கும்பல்களை சில மாதங்களுக்குள்ளாகவே முற்றாக அழித்துவிடுவேன்.

எதிர்வரும் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே அமோக வெற்றி பெறும். அரசாங்கத்தை வலுப்படுத்தும் வகையில் பொது மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி

## சஜித் தரப்பு நம்பிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதியாகியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பலத்தை எம்மால் கைப்பற்ற முடியுமாக இருக்கும்.

பொய்யுரைத்து ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் தொடர்பில் கடந்த ஆறு மாத காலத்தில் மக்கள் நன்கு அறிந்துகொண்டுள்ளனர்.

அதேபோன்று கீழ் மட்ட மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக மாறியுள்ளனர்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே நாட்டின் நிலைமை தொடர்பில் கீழ்மட்ட மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்குமாறு அனைத்து வேட்பாளர்களுக்கும் எடுத்துரைத்துள்ளோம்.

அதற்கமைய தேர்தலில் வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அந்த வகையில் எம்முடைய வெற்றி உறுதியாகியுள்ளது எனவும் தெரிவித்தார். (நி-8)

# விசேட தேவையுடையோர் உதவியாளரை அழைத்துச் செல்லலாம்

## வாக்களிப்புத் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விசேட தேவையுடைய வாக்காளர்களுடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லும் உதவியாளர்கள் 18 வயதை பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதோடு தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளராக இருத்தல் கூடாது.

தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சி ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருத்தல் கூடாது.

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடன் அழைத்துச் செல்ல தகுதிச் சான்றிதழ் ஒன்றை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தேவையான விண்ணப்பங்களைக் கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் அல்லது https://www.elections.gov.lk/ என்ற தேர்தல் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையெடுத்த பஞ்சாப் சிங்கங்கள் பணிந்த லக்னோ ராட்சதர்கள்







பிரப்சிம்ரன், ஷ்ரேயஸ் அரைச்சதம் விளாச, பஞ்சாப் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

லக்னோவில் நேற்று நடந்த பிரிமியர் லீக் போட்டியில் லக்னோ, பஞ்சாப் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். பஞ்சாப் அணியில் பெர்குசன், அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**விக்கெட் சரிவு**

லக்னோ அணிக்கு மார்க்ரம், மிட்சல் மார்ஷ் ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. முதல் ஓவரை வீசிய அர்ஷ்தீப் சிங், அபாயகரமான மிட்சல் மார்ஷை "டக்" அவுட்டாக்கினார். மீண்டும் வந்த அர்ஷ்தீப் ஓவரில், மார்க்ரம் 3 பவுண்டரி அடித்தார். மறுபக்கம் பெர்குசன் பந்தில் பவுண்டரி, சிக்சர் என விளாசிய மார்க்ரம், 28 ஓட்டங்களில் (18 பந்து) போல்டானார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட லக்னோ அணித் தலைவர் ரிஷாப் பண்ட் (2), மக்ஸ்வெல் சுழலில் சிக்கினார். லக்னோ அணி 5 ஓவர்களில் 36/3 ஓட்டங்கள் எனத் திணறியது.

**பூரன் ஆறுதல்**

பின் நிக்கோலஸ் பூரன், ஆயுஷ் படோனி இணைந்தனர். மக்ஸ்வெல் வீசிய 7ஆவது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரி அடித்தார் பூரன். யான்சென் பந்தில் படோனி ஒரு சிக்சர் அடித்தார். சஹால் ஓவரில் பூரன், 2 பவுண்டரி, ஒரு சிக்சர் என அடிக்க, 15 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

அடுத்து வந்த ஸ்ராய்னிஸ் ஓவரில் 6, 4 என ஓட்ட மழை பொழிந்தார் பூரன். இவர் 30 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்தபோது, சஹால் சுழலில் வீழ்ந்தார். லக்னோ அணி 13 ஓவர்களில் 100 ஓட்டங்களை (101/4) கடந்தது. யான்சென் "வேகத்தில்" மில்லர் (18) வெளியேறினார்.

**அர்ஷ்தீப் "மூன்று"**

அப்துல் சமத், சிக்சர் அடித்து ஓட்டக்கணக்கை ஆரம்பித்தார். போட்டியின் 18ஆவது ஓவரை வீசினார் அர்ஷ்தீப். முதல் பந்தில் படோனி பவுண்டரி அடித்தார். மறுபக்கம் ஒரு சிக்சர், 2 பவுண்டரி என சமத் தொடர்ந்து விளாச, 20 ஓட்டங்கள் கிடைத்தன. கடைசி ஓவரில் சுதாகரித்துக் கொண்ட அர்ஷ்தீப், படோனி (41), சமத்தை (27) ஆட்டமிழக்கச் செய்தார்.

20 ஓவர்கள் நிறைவில் லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அர்ஷ்தீப் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**பிரப்சிம்ரன் அரைச்சதம்**

பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன், பிரியான்ஷ் ஆர்யா (8) ஜோடி சுமார் ஆரம்பம் கொடுத்தது. பின் பிரப்சிம்ரன், அணித் தலைவர் ஷ்ரேயஸ் இணைந்து வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். பிரப்சிம்ரன் 23 பந்தில் அரைச்சதம் எட்டினார்.

ஷர்துல் பந்தில் சிக்சர் அடித்தார் ஷ்ரேயஸ். இரண்டாவது விக்கெட்டுக்கு 84 ஓட்டங்கள் சேர்த்தபோது, பிரப்சிம்ரன் (69) ஆட்டமிழந்தார். பின் அரைச்சதம் கடந்த ஷ்ரேயஸ் (52), நேஹல் (43) இணைந்து அணியை வெற்றி பெறச் செய்தனர்.

பஞ்சாப் அணி 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (ம-7,4)

## மக்களிடையே...

போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தங்கள் தலைவர்கள் அன்று நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் தொண்டாற்றிய பின்னரே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆனால் இந்த அரசாங்கம் மக்களிடையே பொய்யைப் பரப்பி ஆட்சிக்கு வந்தது.

இந்த அரசாங்கத்தின் கபடத்தனம் தெளிவாகத் தெரியும் ஒரு சந்தர்ப்பம், அன்று அதிவேக நெடுஞ்சாலை கட்டும் போது அதற்கு எதிராக விமர்சனம் செய்தது.

அப்படி விமர்சனம் செய்தவர்கள் இன்று மாத்தறைக் கூட்டங்களுக்கு வருவது அன்று எதிர்த்த அதே அதிவேக நெடுஞ்சாலையில் தான்.

முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவர தலைமை தாங்கிக்கட்டளையிட்டவர் மகிந்த ராஜபக்ஷ. போரில் ஏதேனும் தவறு நடந்திருந்தால், தலைமை தாங்கியவரிடம் கேட்பதற்குப் பதிலாக, இன்று தலைவர் சொன்னதைச் செய்த இராணுவ வீரர்களைத் தாக்குவது தான் நடக்கிறது என்றார். (ம-7,4)

## வியக்க...

சிறுமி அசத்தியுள்ளார். சாவகச்சேரியைச் சேர்ந்த மேற்படி சிறுமியின் குறித்த அசாத்தியத் திறனைக் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவதற்கான முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சிறுமி காலநிலை, விலங்குகள், மின்னியல் சாதனங்கள், தொழில்கள் உள்ளிட்ட 1000 இற்கும் அதிகமான பெயர்களைத் தமிழில் கேட்கும் போது அவற்றுக்கான ஆங்கில அர்த்தங்களை மிகவும் அசாத்தியமாகக் கூறி அசத்துகின்றார்.

சிறுமியின் தந்தையார் முச்சக்கர வண்டி ஓட்டுனராகவும் தாயார் குடும்பப் பெண்மணியாகவும் உள்ளனர்.

குறித்த சிறுமிக்கு இதுவரை ஏடு தொடக்கப்படாத நிலையில் இவ்வாறு அதிசிறந்த ஞாபக சக்தியைக் கொண்டுள்ளமை பலரையும் வியக்க வைத்துள்ளது. (ம-7,4)

## தீக்காயங்...

கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி மகளும் மனைவியும் வேலைக்குச் செல்ல முற்பட்டவேளை குறித்த குடும்பஸ்தர் தனக்குத் தானே பெற்றோலை ஊற்றி தீ வைத்துள்ளார்.

இந்நிலையில் தீக்காயங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,4)

## தேர்தல் நட...

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் புத்தளம் மாநகர சபை மற்றும் கல்பிட்டி பிரதேச சபைக்கான வேட்புமனுத் தாக்கல்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்குரிய மேன்முறையீடாக கடந்த 25 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தோம். இதனடிப்படையில் நேற்று செவ்வாய்க்கிழமை (01) குறித்த வழக்கு பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கான தற்காலிகத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது. இன்று புதன்கிழமை (02) ஆம் திகதி வரை எந்த விதத் தேர்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் லஃபார் தாஹீர் தலைமையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,4)

## பிறந்த சிசு...

கடந்த 29ஆம் திகதி புத்தூர் மேற்கைச் சேர்ந்த தம்பதியினருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

குழந்தை பிறந்து அரை மணிநேரத்திலேயே இறந்துள்ளது.

மரணத்துக்கான காரணம் தெரியாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,4)


நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

(3816)

காயத்திரி திருமண சேவை

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

076 008 6961, 077 844 9861

076 776 3291

வேலையாட்கள் தேவை

இணுவில் பகுதியில் இயங்கிவரும் பிரபலமான இணுவைபவன் உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (Server)
- தேநீர் தயாரிப்பவர் (Tea Maker)
- ரொட்டி தயாரிப்பவர் (Rotty Maker)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(988)

075 416 1599, 077 408 1517


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
## 20, யாழ்ப்பாண வீதி, 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-12

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 12, யாழ்ப்பாண வீதி 1ஆம் ஒழுங்கையிலுள்ள இல:20 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **வைத்திநாதர் தியாகராஜா கனகேஸ்வரன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **வெற்றிவேலு மகள் கண்மணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு J.F.பொன்னம்பலம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 276/07.01.1939ஆம் இலக்க உறுதியால் **கணபதிப்பிள்ளை வெற்றிவேலு கைம்பெண் சரஸ்வதி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**வயித்தியநாதர் தியாகராசா பெண் சதானந்தேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.வ.பாலசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3030/14.09.1958ஆம் இலக்க உறுதியால் குறித்த **வெற்றிவேலு மகள் கண்மணி (முன்பு முத்துக்குமாரு தியாகராசா பெண் கண்மணி)** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடை யவரானார்.

**சின்னத்தம்பி தேவராசாவும் பெண் றாஜினியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2677/14.03.2000ஆம் இலக்க உறுதியால் **கந்தையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் 1989ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் மயில்வாகனம் முகதாவில் தியாகராசா பெண் சதானந்தேஸ்வியால் எனக்கு நிறைவேற்றித் தரப்பட்ட அறுதி உறுதிப்படி என குறிப்பிட்டுள்ளதே ஒழிய, குறித்த உறுதிக்குரிய அடி இலக்கம் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டிருந்தது.

**காசிப்பிள்ளை துரைச்சாமியும் பெண் சிவாஜினியும்** ஆகியவர்கள்பிரசித்த நொத்தாரிசு கு.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2678/ 14.03.2000ஆம் இலக்க உறுதியால் **கந்தையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் மற்றொரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியிலும் 1989 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் மயில்வாகனம் முகதாவில் தியாகராசா பெண் சதானந்தேஸ்வியால் எனக்கு நிறைவேற்றித் தரப்பட்ட அறுதி உறுதிப்படி என குறிப்பிட்டுள்ளதே ஒழிய, குறித்த உறுதிக்குரிய அடி உறுதி இலக்கம் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டிருந்தது.

**செல்வானந்தன் மகள் சுகன்ஜா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஶ்ரீதரன் அம்பிகா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 247/12.12.2017ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னத்தம்பி தேவராசாவும் பெண் றாஜினியும், காசிப்பிள்ளை துரைச்சாமியும் பெண் சிவாஜினியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த **செல்வானந்தன் மகள் சுகன்ஜா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **செல்வானந்தன் மகள் சுகன்ஜா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடி எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (3815)

# மியன்மார், தாய்லாந்து தூதுவர்களைச் சந்தித்த சஜித்

(கொழும்பு)

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் நடந்த மிக மோசமான இயற்கைப் பேரழிவுக்கு கவலை தெரிவிக்கும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதுவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தில் சிக்குண்டு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்தும் அங்கு மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையால், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை உயர்வடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த பேரழிவுக்கு கவலை தெரிவிக்கும்பொருட்டு, கொழும்பிலுள்ள மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதரகங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விஜயம் செய்தார். (நி-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியர் **திருமதி.வித்தியா ஜெயசுரேஸ்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர். சுப்பிரமணியம் இரட்ணம்**

[ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர்]


அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பிறப்பு :- 07.08.1936**
**இறப்பு:- 30.03.2025**

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.

(#2590)

## யா/வேலணை மத்திய கல்லூரியின் கண்ணீர் அஞ்சலிகள்



எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை திருமதி.**ஜொனி கியோமன் லூட்ஸ் சர்மினி** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர். கப்ரியல்பிள்ளை சில்வெஸ்டர்**

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 17.05.1951
இறப்பு 29.03.2025

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/வேலணை மத்திய கல்லூரி.**

(C-2589)

# இராசிபலன்

02.04.2025
பங்குனி 19, புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 7.53 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 5.44 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 1.58 மணிவரை
சுபநேரம் 4.41-6.11 மணிவரை
இராகுகாலம் -12.11- 1.41 மணிவரை

சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி

**வளவன்**




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், கௌரவமான நாள்.




கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எண்ணங்கள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.




ஏட்டிக்குப் போட்டியாச் செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகிப் பாசம் கூடும், போசன சுகமுண்டு.

**உன்னை நேசிப்பது நாயாக இருந்தாலும் அதனை நீ நேசிப்பாயாக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியிலுள்ள காணிகளை மீட்டுத் தாருங்கள்

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் வன வள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியில் காணப்படும் தனியார் காணிகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி. உஷா சுபலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனைக் கோரியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், சரசாலை கண்டல் காடானது தென்மராட்சி, கோப்பாய் மற்றும் கரவெட்டிப் பிரதேசங்கள் உள்ளடங்களாக 3949.3 ஏக்கர் நிலப் பரப்பையும், மட்டுவில் சந்திரபுரம் கண்டல் காடு 117ஏக்கர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளது.

இவ்வாறு மேற்படித்திணைக் களங்களால் தமது ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட காணிகளில் தனியார் காணிகள், வண்டில் சவாரித் திடல், மேய்ச்சல் தரவை ஆகியன உள்ளடங்குகின்றன.

திணைக்களங்களின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட தனியார் காணிகளை விடுவிப்பதாக அவர்கள் கடந்த காலத்தில் உறுதியளித்துள்ள போதிலும் இதுவரை அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

அத்துடன் மேய்ச்சல் தரவை மற்றும் வண்டில் சவாரித் திடல் ஆகியவற்றை விடுவிக்க முடியாது எனவும் வன வள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுத்து விடுவிப்பதாக உறுதியளித்த தனியார் காணிகளை முதற் கட்டமாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-8-30)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஈழ நல்லூர் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 9.20 மணி முதல் 10.20 மணி வரையுள்ள இடப லக்ன சுப முகூர்த்த வேளையில் மனோன்மணி அம்பாளுக்கும் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் நவசக்தி இராஜ கோபுரத்திற்கும் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக நாளை வியாழக்கிழமை காலை முதல் பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் சனிக்கிழமை மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தல் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-8-33)





வரலாற்றுச் சிறப்பு மிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய 3 ஆம் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது பல அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து பொங்கல் பொங்கி, படையல் இட்டு தமது வழிபாடுகளில் ஈடுபட்டு இருந்தனர்.

# சட்டநாதர் பெருமானுக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

நல்லையம்பதி அருள்தரு ஸ்ரீமத் நல்லைநாயகி சமேத ஸ்ரீ நல்லைநாத சுவாமி (சட்டநாதர் பெருமான்) ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவ தினங்களில் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5 மணிக்கு திரு வூஞ்சல், கொடியிறக்கம் என்பன நடைபெற்று 12 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5 மணிக்கு திருக் கல்யாண உற்சவமும் இடம் பெறும் என ஆலய அபிவிருத்திச் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

# மூளாய் முருகனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)


மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமிக்கு இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு வருடாந்த கொடியேற்ற உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற உள்ளது.

மஹோற்சவ தினங்களில் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 7 ஆம் திகதி திங்கட்கிழமை மஞ்சமும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் பங்குனி உத்திர நன்னாளில் தீர்த்தமும் நடைபெற்றும். (நி-8)

# கசிப்பு உற்பத்தி நிலையம் தீயிட்டு முற்றாக அழிப்பு

## தீவக சிவில் சமூகம் அதிரடி நடவடிக்கை

(சாவகச்சேரி)



புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரம் வல்லன் நாவில் குளத்தினை அண்டிய பற்றைக்காடுகள் நிறைந்த பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம சேவகர் மற்றும் தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் உறுப்பினர்களின் தீவிர முயற்சியின் காரணமாக முற்றுகையிடப்பட்டு முற்றாக தீமூட்டி எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாத காலமாக புங்குடுதீவு பிரதேசத்தில் வாழ்கின்ற சில நபர்களின் ஆதரவோடு கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து வருகை தந்துள்ள சமூக விரோதிகளினால் கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும் அதன் காரணமாக கிராமத்தில் சமூக சீர்கேடுகள், வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் பொது மக்கள் முறையிட்ட நிலையில் மேற்படி முன்மாதிரிச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர், தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் உறுப்பினர்கள், புங்குடுதீவு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் மேற்படி சட்டவிரோத உயிர் கொல்லி சாராயம் தயாரிக்கப்படுகின்ற பகுதியை சுற்றிவளைத்து அன்றைய தினம் இரவு முழுவதும் கசிப்புத் தயாரிக்கும் நபர்களைக் கைது செய்யும் நோக்கில் அங்கு அவர்கள் மறைந்திருந்த போதிலும் அங்கு அக் குற்றவாளிகள் வருகை தராமையினால் கசிப்பு உற்பத்தி நிலையம் தீயிட்டுக் கொளுத்தி முற்றாக அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாகாணசபைத் தேர்தல்

## இந்த வருடம் சாத்தியமில்லை

### அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம்இடம்பெறாது என அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றால் ஆறுமாதத்திற்குள் இலங்கைமூன்று தேர்தல்களைச் சந்தித்திருக்கும் என தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக மற்றுமொரு தேர்தல் சாத்தியமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தொடர்ந்து தேர்தல்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது.அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுடன் பிரதானமான தேர்தல்கள் முடிவிற்கு வரும். மாகாண சபைத் தேர்தல்களை மாத்திரம் நடத்தவேண்டும். சட்டங்களை மாற்ற வேண்டியுள்ளதாலும், நாட்டின் அபிவிருத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாலும் மாகாண சபை தேர்தல்களை இந்த வருடம் நடத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு
**சு.தனறூபன்**
(அதிபர், SLPS-II)



அருட்தந்தை
**S.பற்றிக் லியோ OMI**
(முன்னை நாள் உப அதிபர்)



திருமதி
**நந்தினி வசந்தறூபன்**
(ஆசிரியை)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் M.Ed பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் இன்னும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(3800)

வாழ்த்துவோர்: கொழும்புத்துறை சென்ஜோசப் வித்தியாலயம், ஆசிரியர் நலன்புரிக் கழகம்.


கிளிநொச்சி மாவட்டத்தில்

# 1200 ஏக்கர் காணிகள் முப்படையினர் வசம்

### வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து இருநூறு ஏக்கருக்கு மேற்பட்ட மக்களின் காணிகளை முப்படையினா் கையகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இராணுவத்தினர் வசமுள்ள காணி தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களது காணிகள் பல விடுவிக்கப்படாது இராணுவத்தினர் வசம் காணப்படுகின்றது. அந்தவகையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 653.65 ஏக்கரும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 180.38 ஏக்கரும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 116.61 ஏக்கரும், பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் 248.18 ஏக்கரும் என 1209.22 ஏக்கர் காணி இராணுவம் வசமுள்ளது. மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்பதே காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் வேண்டுகோள் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8-250)

# பண்டிகைக் காலங்களில் தொடரும் சுற்றிவளைப்புக்கள்

### நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதிக்கப்படும் எனவும் அதிகார சபை குறிப்பிட்டது.

நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறியும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டது. (நி-8)






**28 ஆம் ஆண்டு குருபூசை**
**தவத்திரு வே.முருகேசு சுவாமி**
**அவர்களின்**
**28 ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு**

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் குருபூசை நிகழ்வு
**04.04.2025 வெள்ளிக்கிழமை**
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும்.
இந்நிகழ்வானது விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி
சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சுவாமி அவர்களின்
நினைவுப் பேருரையுடன் கூடிய
அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெறும்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(3772)

சுவாமி அவர்களின்
அடியவர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>8 இல் செவ்<br>கி.பா: 74<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDE,TO<br>எதிர்பார்ப்பு :அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15283 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>1 இல் சூரி செவ்<br>கி.பா: 47<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Crafman<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உத்தியோகம்<br>தொ.இ: G/15064 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 5 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BCom, Branch Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15284 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்- BBA, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு : Accountant, Engineer வெளிநாடு (London)<br>தொ.இ: G/15067 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>2இல் செவ்<br>கி.பா: 49<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, Administrative Assistant(UK)<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ: B/15285 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 101<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HNDA, Account Executive(pvt)<br>எதிர்பார்ப்பு : படித்த ஆண்<br>தொ.இ: G/15068 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆந்திராவை அச்சுறுத்தும் புற்றுநோய்




(டில்லி)

ஆந்திராவில் புற்று நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பாலபத்ரபுரம் கிராமத்தில் புற்றுநோய் பாதிப்பு அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், இது தேசிய சராசரியை விட மூன்று மடங்கு அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வமாக 10 ஆயிரம் பேரில் 32 நபர்களுக்கு புற்றுநோய் பாதிப்புகள் பதிவாகி இருந்தாலும், அதிகாரபூர்வமற்ற மதிப்பீடுகளின்படி சுமார் 100 பேருக்கு புற்றுநோய் பாதிப்புகள் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் இப்புற்றுநோய் பாதிப்பிற்கு, அருகிலுள்ள தொழிற்சாலைகளால் ஏற்படும் நிலம், நீர் மற்றும் காற்று மாசுபாடே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மருத்துவ முகாம்கள் மற்றும் பரிசோதனைகளை நடத்தி, காரணங்களை கண்டறியும் முயற்சியில், மாநில அரசு இறங்கியுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட கிராம மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர் எனவும் பல ஏழை மக்கள் சிகிச்சைக்கான பண வசதி இல்லாமல் தவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# பசுபிக் பெருங்கடலில் 9 ரிக்டர் அளவி... பூகம்பம் ஏற்பட வாய்...

## எதிர்வு கூறிய ஜப்பான் அரசு

**(டோக்கியோ)**

**பசுபிக் பெருங்கடலின் கரையோரப் பகுதிகளில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் ஒரு பாரிய பூகம்பம் ஏற்பட்டால் ஜப்பானில் 1.81 டிரில்லியன் டொலர்கள் பொருளாதார நஷ்டம் ஏற்படும் என நேற்று முன்தினம் அந்நாட்டு அரசாங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**

அத்துடன், இந்த இயற்கை அனர்த்தத்தினால் சுனாமி ஏற்படும். நூற்றுக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுவதோடு, சுமார் 300,000 பேர் உயிரிழக்க நேரிடும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜப்பான் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 270.3 டிரில்லியன் யென் (1.8 டிரில்லியன் டொலர்கள்) பொருளாதார சேதம் ஏற்படும். அதாவது, முந்தைய மதிப்பீடு 214.2 டிரில்லியன் யென்களை விட அதிகரித்துள்ளது.


புதிய மதிப்பீட்டில் பண வீக்க அழுத்தங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் தரைத் தரவுகள், வெள்ளப் பெருக்குப் பகுதிகள் விரிவடைந்துள்ளது என்பதைக் குறிக்கின்றன.

உலகில் அதிகமாக பூகம்பத்தால் பாதிக்கப்படும் நாடுகளில் ஜப்பானும் ஒன்றாகும். நான்காய் பள்ளத்தாக்... ரிக்டர் அ... ஏற்படுவத... வாய்ப்பு ... அரசாங்கம்...

இதேவே... சூழ்நிலைய... ரிக்டர் அ... ஏற்படக்கூடு... ஜப்பானில் ... சனத்தொ... பாதுகாப்பா... யேற்றப்பட ... காலத்தில் ... ஏற்பட்டால்... இடிபாடுகளி... வரை உயி...

ஜப்பானி... கரையோர... பள்ளத்தாக்... மீற்றர் (... செல்கிறது... கடற்பகுதி ... அடியில் ெ... குவிந்து வ...

## ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி விஜயம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அடுத்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 டிரில்லியன் டொலர்களை அமெரிக்க நிறுவனங்களில் முதலீடு செய்ய உள்ளதாக சவுதி அரேபிய அரசு தெரிவித்திருந்த நிலையிலேயே, டொனால்ட் ட்ரம்பின் பயண அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில் நடந்த நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திடும் விழாவில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அடுத்த மாதம் கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியாவுக்குச் செல்லும் திட்டத்தை தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டபடி மே மாதத்தில் இப்பயணம் நடக்குமா என்று கேட்டபோது, அது அடுத்த மாதம் நடக்கலாம், ஒரு வேளை சிறிது தாமதமாகலாம் என்று ட்ரம்ப் பதில் அளித்தார்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு போன்ற துறைகளில் வளைகுடா நட்பு நாடுகளுடன் அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதே இப்பயணத்தின் நோக்கமாகும்.

சவுதி அரேபியா மற்றும் கட்டாரில் அமெரிக்காவின் முக்கிய இராணுவத் தளங்கள் உள்ளன, மேலும் பிராந்திய இராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்காவுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் முக்கிய பங்கு வகிக்கிறது [illegible]

## இந்தியாவில் அணு உலைகள் ... அமெரிக்க நிறுவனத்திற்கு ட்ரம்...



(வோஷிங்டன்)

இந்தியா - அமெரிக்கா இடையே 2007 இல் கையெழுத்தான அணு சக்தி ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை.

20 ஆண்டுகளுக்குப் பிறகு அணுசக்தி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையே கடந்த 2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷும் இணைந்து இந்த ஒப்பந்தம் மேற்கொண்டனர்.

ஆனால் இந்த ஒப்பந்தம் அதன்பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ில் ...வில் ........... ...ாய்ப்பு



பள்ளத்தாக்கு பகுதியில் 8 முதல் 9 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்படுவதற்கான 80 சதவீதமான வாய்ப்பு இருப்பதாக ஜப்பான் அரசாங்கம் கணித்துள்ளது.

இதேவேளை, மிக மோசமான சூழ்நிலையில், இந்தப் பகுதியில் 9 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்படக்கூடும் என்ற அடிப்படையில், ஜப்பானில் 1.23 மில்லியன் மொத்த சனத்தொகையில் ஒரு வீதம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட வாய்ப்புள்ளது. கோடை காலத்தில் தாமதமாக பூகம்பம் ஏற்பட்டால், சுனாமி மற்றும் கட்டட இடிபாடுகளில் சுமார் 298,000 பேர் வரை உயிரிழக்க நேரிடும்.

ஜப்பானின் தென்மேற்கு பசுபிக் கரையோரத்தில் அமைந்துள்ள பள்ளத்தாக்கு சுமார் 900 கிலோ மீற்றர் (600 மைல்) வரை செல்கிறது. அங்கு பிலிப்பைன்ஸ் கடற்பகுதி யூரேசிய தகட்டுக்கு அடியில் செல்கிறது. பூமிக்கடியில் குவிந்து வரும் டெக்டோனிக் தட்டு விகாரங்கள் சுமார் 100 முதல் 150 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாரிய பூகம்பத்தை ஏற்படுத்தக் கூடும்.

கடந்த ஆண்டு ஜப்பான் முதல் பாரிய பூகம்ப எச்சரிக்கையை வெளியிட்டது. ஏனெனில் பள்ளத்தாக்கின் விளிம்பில் 7.1 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்ட பின்னர் பள்ளத்தாக்கில் 9 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்படுவதற்கான "ஒப்பீட்டளவில் அதிக வாய்ப்பு" உள்ளது. 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 9 ரிக்டர் அளவிலான பூகம்பம் பேரழிவை ஏற்படுத்திய சுனாமியையும் வடகிழக்கு ஜப்பானில் உள்ள ஒரு அணு மின் நிலையத்தில் மூன்று உலைகளை சேதப்படுத்தியதுடன் 15,000 இற்கும் மேற்பட்டோரை பலியெடுத்தது குறிப்பிடத்தக்கது. (ni-8)

# ...லகள் அமைக்க ...த ட்ரம்ப் அனுமதி




நடைமுறைக்குவரவில்லை. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு அணுசக்தி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.


இந்தியாவில் அணு உலைகள் அமைக்க ஹோல்டெக் என்ற அமெரிக்கா நிறுவனத்திற்கு ட்ரம்ப் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இருப்பினும், இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக இணைந்து உருவாக்கப்படும் அணு மின் நிலையங்கள், அமெரிக்க அரசின் அனுமதி இல்லாமல் இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாடுகளுக்கோ அல்லது அமெரிக்க நிறுவனத்தை தவிர வேறு எந்த நிறுவனத்துக்கோ மாற்றப்படக்கூடாது என்று அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் நிபந்தனை விதித்துள்ளது. (ni-8)

...ய கடந்த
...ளப்பட்ட
...யெழுத்
...ந்தியப்
...ம் அப்
...ி ஜார்ஜ்
...ப்பந்தம்
...ன்பின்பு



# விண்ணோக்கிப் பாய்ந்த ரொக்கெட் சுழன்றடித்து கடலில் வீழ்ந்தது




(ஒஸ்லோ)


விண்வெளிக்குச் செயற்கைக்கோள் அனுப்புவதில் உலக நாடுகள் பலவும் போட்டி போடுகின்றன. இந்த போட்டியில் தற்போது பல தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் இணைந்துள்ளன.

அந்தவகையில் ஜேர்மனியைச் சேர்ந்த இசார் ஏரோஸ்பேஸ் என்ற தனியார் விண்வெளி நிறுவனமானது நோர்வேயில் இருந்து சோதனை அடிப்படையில் ஸ்பெக்ட்ரம் என்ற ரொக்கெட்டை ஏவியது. ஐரோப்பாவில் இருந்து ஏவப்பட்ட முதல் ரொக்கெட் இதுவாகும்.

திட்டமிட்டபடி அந்த ரொக்கெட் விண்ணை நோக்கி சீறிப்பாய்ந்தது. 30 நொடிகள் வானில் பறந்த அந்த ரொக்கெட் பின்னர் சுழன்றடித்துக் கொண்டு கடற்பகுதியில் விழுந்தது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ரொக்கெட் எட்டியதாக இசார் ஏரோஸ் பேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ni-8)



# அமைதிக்கான நோபல் பரிசுக்கு இம்ரான் கான் பெயர் பரிந்துரை







(வோஷிங்டன்)

தெற்காசியாவில் அமைதியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக இம்ரான் கான் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

கடந்த ஜனவரியில் அவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

மனித உரிமைகள் மற் [illegible] பங்களிப்புகளுக்காக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நோர்வே நாட்டின் அரசியல் கட்சியான பார்ட்டி யேட் சென்ட்ரம் உடன் இணைந்த ஒரு வழக்கறிஞர் குழுவான பாகிஸ்தான் வேர்ல்ட் அலையன்ஸ் அமைப்பினர் இம்ரான் கானின் பெயரை பரிந்துரைத்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டில், தெற்காசியாவில் அமைதியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக இம்ரான் கான் அமைதிக்கான நோபல் பரிசுக்கு முதன் முதலில் பரிந்துரைக்கப்பட்டார்.

தற்போது இரண்டாவது முறையாக அந்த பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். (ni-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழேந்திரனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரனை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான நீதிமன்றம் நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சாமர சம்பத்தின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தின் விளக்கமறியல் நீடிக் கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 8 ஆம் திகதி வரை அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 480 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 280 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 600 |
| தக்காளி | 450 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 220 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 300 |
| கரட் | 600 | 700 | 700 | 700 |
| பூசணி | 240 | 150 | 160 | 200 |
| புடோல் | 180 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 250 | 160 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 260 | 250 | 300 |
| பயற்றங்காய் | 450 | 450 | 250 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 250 | 250 | 250 | 300 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2300 | 2000 | 2800 |
| போஞ்சி | 600 | 500 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 200 | 450 |
| கீரை – 1 பிடி | 140 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 270-300 | 160-200 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 450 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 500 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 100 |
| ஈரப்பலா | - | 100 | 100 | 250 |

## இன்று ஒரு தகவல் 348

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# தீவிர குருபக்தி

ஒரு நாள் ஒரு அப்பா தன் பிள்ளையை அழைத்துக் கொண்டு என்னிடம் வந்தார்.

சேர் இவன் சரியாகப் படிக்கின்றான் இல்லை. பெரியவர்களை மதிக்கிறான் இல்லை. நீங்கள் கொஞ்ச நாள் இவனுக்கு குருவாக இருந்து நல்ல விடயங்களை சொல்லிக் கொடுங்கள் என்றார்.

பெரியவர்களையே மதிக்காதவன் எப்படி என்னை மதிப்பான்? என்று யோசித்துப் பார்த்துவிட்டு வேண்டாம் என்னை விட்டு விடுங்கள் என்றேன்.

அவர் விட மாட்டேன் என்றுவிட்டார். இல்லை என்றால் அவரே சிஷ்யன் ஆகிவிடுவார் போல இருந்தது. வேறு வழியில்லாமல் அந்தப் பையனையே என்னுடைய சீடனாக ஏற்றுக் கொண்டேன்.

குருபக்தி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி சொல்லிக் கொடுத்தேன் அவனுக்கு.

சதமகர் என்று ஒரு குரு இருந்தார். அவருக்கு ஒரு சீடன். பெயர் துளசி சைதன்யன்- நைஷ்டிக பிரம்மச்சாரி! தன்னுடைய குருவுக்கு எந்த நேரத்திலே என்ன தேவைப்படும் என்பதை புரிந்து சேவை செய்கிறவன்.

ஆனால் இவன் மீது மற்றைய சீடர்களுக்குப் பொறாமை வந்து விட்டது! இவன் மட்டும் இப்படி இருக்கிறானே என்று. உடனே குருவிடம் போய்க் கோள் மூட்டினார்கள். அவன் சரியில்லை என்று.

இருந்தாலும் இதை எல்லாம் அந்தக் குரு நம்பவில்லை! அவருக்குத் தெரியும் யார் யார் எப்படி என்பது. துளசி சைதன்யனின் பெருமையை மற்ற சீடர்களுக்கு உணர்த்த நினைத்தார். அதற்கு ஒரு வழி செய்தார்.

ஒரு நாள் சீடர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு ஒரு காட்டு வழியாக போய்க்கொண்டிருந்தார். அங்கே ஒரு பெரிய மலையருவி கொட்டிக்கொண்டிருந்தது. குரு சீடர்கள் பக்கம் திரும்பினார்.

இந்த மலையின் மேலிருந்து அந்த படுபாதாளத்திலே குதிப்பதற்கு உங்களிலே யார் தயார் என்று கேட்டார். ஒரு மூட்டை முடிச்சோடு வந்துகொண்டிருந்தான் துளசி சைதன்யன். அவனைப் பார்த்தார்.

நீ மேலிருந்து அருவியிலே குதி என்றார். அப்படியே செய்கிறேன் சுவாமி! என்று ஓடிப்போய் பொத் என்று குதித்தான். அடுத்த கணமே குருநாதர் தன்னுடைய யோக சக்தியால் பறந்து போய் அவன் கீழே விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார்.

இது மற்றைய சீடர்களுக்கெல்லாம் ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். இவனை மாட்டி விடுவதற்கு.

ஒரு நாள் வெற்றிலை இடிக்கிற சின்ன உரலையும் உலக்கையையும் எடுத்து ஒழித்து வைத்துவிட்டார்கள். சதமகர் சந்நியாசி இல்லை. அவர் வெற்றிலை போடுவார். பல்லு சரியில்லை. அதனாலே இடித்துத்தான் வெற்றிலை போட வேண்டும். திடீர் என்று வெற்றிலை பாக்கு கேட்டார். உரலைத் தேடினார். கிடைக்கவில்லை. என்ன செய்வது. குரு கேட்டுவிட்டாரே. குரு சேவை தானே முக்கியம். இவன் என்ன செய்தான். வெற்றிலை பாக்கை தன்னுடைய வாயிலே போட்டு மென்று அதை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டார். குரு எதையோ படித்து விட்டு வாயிலே போட்டுக்கொண்டார்.

துளசி இன்றைக்கு தாம்பூலம் நன்றாக இடிக்கப்பட்டிருக்கிறது ருசியாகவும் இருக்கிறது! அதை இடித்த பாத்திரத்தை கண்ணாலே பார்க்க வேண்டும் என்றார்.

அதை மட்டும் அனுப்பி வை! நீ வரவேண்டாம் என்று சொல்லி விட்டார்.

இதைக் கேட்டதும் துளசி தவித்துப் போய்விட்டான். நான் போகாமல் எப்படி வாயை மட்டும் அனுப்பி வைக்க முடியும்? இவன் தவிப்பதைப் பார்த்ததும் மற்ற சீடர்களுக்கெல்லாம் மனதுக்குள்ளே மிகவும் சந்தோஷம்!

துளசி கொஞ்சமும் யோசிக்கவில்லை. வாளை எடுத்தான். தன் தலையையே அறுத்தான். இன்னொரு சீடனிடம் கொடுத்துவிட்டான். எடுத்துக்கொண்டுபோய் குரு முன்னால் வைத்தார்கள்! அந்தத் தலையிலே வாய் திறந்து இருந்து. வெற்றிலையை போட்டு மெண்டது சிவப்பாக இருந்தது.

அவனுடைய குருபக்தியை இப்போது எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அந்த குரு சதமகர் தன்னுடைய அற்புதத் திறமையாலே அந்தத் தலையை மறுபடியும் ஒட்ட வைத்தார். துளசிக்கு உயிர் வந்துவிட்டது. அந்தக் கதையைச் சொல்லி துளசி சைதன்யனுடைய குருபக்தி எப்படி என்று கேட்டேன் என்னிடம் இருந்த பையனிடம்.

மிகவும் அபாரம் சேர் என்றான். மிகவும் அடக்கமாக! நான் உடனே சும்மா விளையாட்டுக்காக அவனிடம் கேட்டேன்.ஏம்ப்பா உன்னுடைய குருபக்தியை என்னிடம் காட்டுவதற்கு உனது கழுத்தை நீயே அறுக்க வேண்டும் என்று நான் சொன்னால் நீ செய்வியா என்று கேட்டேன்.

என்னுடைய கழுத்தை நானே அறுக்க வேண்டிய அவசியம் இல்லை சேர் என்றான் அவன். ஏண்டா என்றேன். அதே காரியத்தைத்தான் இனிமேல் நீங்கள் தினமும் செய்யப்போறீங்களே சேர் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை படுகொலையும் விசாரிக்கப்பட வேண்டும்

## செல்வம் எம்.பி வலியுறுத்து

(வவுனியா)

**அரசு நியாயமாகச் செயற்படுமாக இருந்தால் பட்டலந்த போன்று வெலிக்கடைப் படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**


வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்டலந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது இவ்வளவு காலமும் தூசு தட்டாமல் இருந்து ஜே.வி.பி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உண்மையில் அதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேநேரம் 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

பட்டலந்த பிரச்சினையை விட 1983 கலவரம் கூடுதலான இழப்புக்களை சந்தித்தது. இது வரலாற்றில் முதன்மையான இடத்தில் உள்ள படுகொலை. இதை அரசாங்கம் விசாரணைக்குக் கொண்டு வந்து, அதற்கான நீதி, நியாயத்தை வெளிப்படுத்த வேண்டும் என மக்கள் சார்பாகவும்,



வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் சார்பாகவும் கோரிக்கையை முன் வைக்கின்றேன் எனத் தெரிவித்தார். (நி-8-250)

# காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

(தருமபுரம்)

இலங்கை எதிர்கொண்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான தேசியரீதியிலான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக வடமாகாணத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் கிளிநொச்சி தனியார் விருந்தகத்தில் நேற்று நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் இத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. பேராசிரியர் ஜகத் முனசிங்கே காலநிலை தொடர்பான தெளிவூட்டலை வழங்கினார்.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கியின் துறைசார்ந்த விரிவுரையாளர்கள், விவசாய, கடற்றொழில் அமைப்பு சார்ந்தோர், தொண்டு நிறுவனங்கள் சார்ந்தோர், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள் , பொது அமைப்பு சார்ந்தோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-8-316)

# இருதய நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

நாளுக்கு நாள் நாட்டில் இருதய நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருவதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார்.

தினசரி 175 முதல் 200 பேர் வரை இருதய நோயாளர்களாக அடையாளங் காணப்படுவதாக வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்தார்.

உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இருதய நோய்க்கு வழிவகுப்பதாகஅவர் சுட்டிக்காட்டினார். (நி-8)

## வர்த்தக உலகம்

### வலிமையான மற்றும் கண்களை கவரும் மெல்லிய வடிவத்திலான நவீன Infinix HOT 50 Pro+ கைபேசிகள் இப்போது இலங்கையில்!




இலங்கையின் முன்னணி ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி பிராண்டான இன்பினிக்ஸ் (Infinix) தனது புதிய Hot 50Pro+ ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை விற்பனைச் சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. Ultra Slim ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி 6.88mm பருமனுடன் 3D Curved SlimEdge வடிவமைப்புடன், கைக்கு அடக்கமாக எளிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Infinix Hot 50Pro+ ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி நாடு முழுவதும் Abans காட்சியறைகளில், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை பிரதிநிதிகள் மற்றும் BuyAbans.com ஊடாக ஆன்லைன் தளத்திலும் ரூ.69,999/- இற்கு கொள்வனவு செய்ய முடியும்.

Hot 50Pro+ ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி கவர்ச்சியான தோற்றத்துடனும் வலுவான கட்டமைப்புடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. Social Media, Streaming உள்ளடக்கங்களை இதன்மூலம் மிகவும் சுலபமாக செயற்படுத்த முடியும். 162g என்ற மிகச்சிறிய எடையுடன் 3D Curved AMOLED Display வண்ணமயமான திரையை இது வழங்குகிறது. Corning Gorilla Glass உடன் 2X Scratch Resistance பாதுகாப்பும், IP54 தரச் சான்றுடன் தூசி மற்றும் மழைத் தூரல்களில் இருந்து இது பாதுகாக்கப்படுகிறது.

AI தொழில்நுட்பம் கொண்டு இயங்கும் Hot 50Pro+ ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துபவர்களின் கலைநயத்தையும், திறமையையும் மேம்படுத்தும் வகையில் AI Eraser, AI Cutout, AI Voice Capture போன்ற சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

Infinix Sri Lanka இன் உள்நாட்டுக்கான பிரதானி Muhammad Shahzeb Ather இதைப் பற்றி கூறுகையில், Hot 50Pro+ என்பது அழகிய வடிவமைப்பு மற்றும் நீண்ட ஆயுளைக் கொண்ட ஒரு ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி எனக் குறிப்பிட்டார். மேலும், இது யதார்த்த உலகத் தேவைகளுக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Hot 50Pro+ உங்கள் அன்றாட வாழ்க்கைக்கான பயன்பாட்டுத் தேவைகளை எளிதாக்குகிறது. 6.88mm Ultra Slim வடிவமைப்பைக் கொண்டுள்ள இந்தக் கைபேசி எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Corning Gorilla Glass தொழில்நுட்பத்தால் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.

நாளாந்த உங்கள் முக்கிய தருணங்களை படம் எடுப்பதற்கும், High-Definition Content ஸ்ட்ரீம் செய்யவும், உங்கள் அன்பானவர்களுடன் மற்றும் உறவினர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் இது மிகவும் உறுதுணையாக அமைகிறது.

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. Infinix ஸ்மார்ட் மொபைல் சந்தையில் முன்னணி விற்பனை நாமமாகத் திகழ்கிறது. Generation Z வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு, மேம்பட்ட தொழில்நுட்பம், சக்திவாய்ந்த செயற்பாடு, அழகான வடிவமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்து வருவதோடு, Infinix எதிர்காலத் திற்கேற்ப சிறந்த தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து வருகிறது.

தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா உள்ளிட்ட 40இற்கும் மேற்பட்ட நாடுகளில் Infinix பிராண்ட் பரவி உள்ளது. 2018-2020 காலப்பகுதியில் 160% வளர்ச்சியை தொட்டுள்ளதோடு, உலகின் முன்னணி மொபைல் பிராண்ட்களில் ஒன்றாக Infinix உருவாகியுள்ளது.

மேலும் தகவல்களுக்கு https://lk.infinixmobility.com/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும், Infinix Sri Lanka தொடர்பான அனைத்து புதுத் தகவல்களுக்கும் https://www.facebook.com/InfinixMobileSriLanka/ (Facebook) மற்றும் https://www.instagram.com/infinixmobilelk/ (Instagram) பக்கங்களைப் பின்தொடரவும்.

### ஹவ்லொக் சிட்டி மோலில் சிறுவர்களுக்கான ஓவியப் போட்டி ஆதரவு வழங்கிய கொமர்ஷல் வங்கியின் 'அருணலு'




கொமர்ஷல் வங்கியானது அண்மையில் ஹவ்லொக் சிட்டி மோல் ஏற்பாடு செய்திருந்த சிறுவர்கள் ஓவியப் போட்டி நிகழ்வின் உத்தியோகபூர்வ வங்கி பங்குதாரராக தனது ஆதரவினை வழங்கியிருந்தது. 4 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 1,500 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

"HCM படைப்பாற்றல் வெற்றித் தலைவர்கள் 2025" எனப் பெயரிடப்பட்ட இந்தப் போட்டியானது, கொமர்ஷல் வங்கியின் பிரபலமான சிறுவர்கள் சேமிப்புக் கணக்கான 'அருணலு'வுடன் தொடர்புடையதாகும். மேலும் வெற்றியாளர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் பரிசில்களை வங்கி வழங்கியது. மேலதிகமாக, இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் கூடத்திற்குச் சென்ற ஒவ்வொரு குடும்பத்தினரும் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். அன்றைய தினம் அருணலு சேமிப்புக் கணக்குகளைத் திறந்தவர்களுக்கு மேலதிக பரிசில்களும் வழங்கப்பட்டன.

கொமர்ஷல் வங்கியின் முதன்மையான சிறுவர்கள் சேமிப்புக் கணக்கான அருணலு, சிறுவர் கணக்குகளுக்கு அதிக வட்டி விகிதத்தை வழங்குவதுடன், வங்கியில் கணக்கு வைத்திருக்கும் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தங்கள் பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று சித்தியடையும் பட்சத்தில் சிறப்பு ரொக்கப் பரிசில்களையும் வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி மற்றும் ஹவ்லொக் சிட்டி மோலின் பிரதிநிதிகளுடன் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 737





ஆனால் பூங்குழலி கூறியது போலவே கிட்டத்தட்ட அது செய்து விட்டது. கால்வாயில் இறங்கிப் படகிலிருந்து பூங்குழலியின் மீது அது தன் கோபத்தைக் காட்ட முடியவில்லை. திரும்பித் துள்ளிக் குதித்துக் கொண்டு சென்றது. அச்சமயம் வானதி தென்னந்தோப்பின் மறுபுறத்தில் இருந்த பலலக்கை நோக்கித் தனியாகப் போய் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குதூகலத்தினால் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. எதிரில் துள்ளிக் குதித்துக் கொண்டு வந்த ரிஷபராஜனைப் பார்த்ததும் முதலில் அவள் குதூகலம் அதிகமாயிற்று. ஆனால் ரிஷபராஜன் தலையைக் குனிந்து கொண்டு, கொம்பை நீட்டிக்கொண்டு, வாலைத் தூக்கிக் கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் பயந்து போனாள். கால்வாய்க் கரையை நோக்கித் திரும்பி ஓடிவருவதைத் தவிர வேறு வழியில்லை. நந்தி மண்டபத்துக்கு வெகு சமீபத்தில் கால்வாய்க் கரைக்கு அவள் வந்து விட்டாள். அப்புறம் மேலே செல்ல முடியவில்லை.

ஏனெனில் கரையிலிருந்து கால்வாய் ஒரே கிடுகிடு பள்ளமாயிருந்தது. கரையோரமாக நந்தி மண்டபத்துக்கு வரலாம் என்று திரும்பினாள். அச்சமயம் ரிஷபம் அவளுக்கு வெகு சமீபத்தில் வந்திருந்தது. பின்புறமாக நகர்ந்து கால்வாயில் விழுவதைத் தவிர வேறு மார்க்கம் ஒன்றும் இல்லை. அப்போது தான், "ஐயோ! ஐயோ! அக்கா! அக்கா!" என்று அவள் கத்தினாள். வானதியின் அந்த அபயக் குரல் பொன்னியின் செல்வன், குந்தவை இவர்களின் காதில் வந்து விழுந்தது.

வானதியின் அபயக் குரல் வந்த திசையைப் பொன்னியின் செல்வனும் குந்தவையும் திடுக்கிட்டு நோக்கினார்கள். அவர்கள் இருந்த நந்தி மண்டபத்துக்குச் சற்றுத் தூரத்தில் கால்வாயின் உயரமான கரையில் வானதி தோன்றினாள். கால்வாயின் பக்கம் அவள் முதுகு இருந்தது. அவள் தனக்கு எதிரே ஒரு பயங்கரமான பொருளைப் பார்ப்பவள் போலக் காணப்பட்டாள். அவளை அவ்விதம் பயங்கரப்படுத்தியது என்னவென்பது மறுகணமே தெரிந்து விட்டது. கம்பீரமாக குரல் கொடுத்துக் கொண்டு அவளுக்கு எதிரில் ரிஷபராஜன் தோன்றினான்.

இன்னும் ஒரு அடி வானதி பின்னால் எடுத்து வைத்தால் அவள் கால்வாயில் விழ வேண்டியதுதான். பின்னால் நகருவதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இல்லை. இதையெல்லாம் அருள்வர்மன் பார்த்த தட்சணமே அறிந்து கொண்டான். உடனே நந்தி மண்டபத்தின் படிக்கட்டிலிருந்து கால்வாயில் குதித்து மின்னலைப் போல பாய்ந்து ஓடினான். வானதி கால்வாயின் கரையிலிருந்து விழுவதற்கும், அருள்வர்மன் கீழே ஓடிப் போய்ச் சேர்வதற்கும் சரியாக இருந்தது. கால்வாயின் தண்ணீரில் வானதி தலைகுப்புற விழுந்து விடாமல், இரு கரங்களாலும் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

வானதிக்கு நேருவதற்கு இருந்த அபாயத்தை அறிந்து ஒரு கணம் குந்தவை உள்ளம் பதைத்துத் துடிதுடித்தாள். மறுகணம் அருள்மொழி வர்மன் அவளைத் தாங்கிக் கொண்டதைப் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள். வேலும் வாளும் வீசி, வஜ்ராயுதம் போல் வலுப்பெற்றிருந்த கைகளில் துவண்ட கொடியைப் போல் கிடந்த வானதியைத் தூக்கிக் கொண்டு அருள்வர்மன் குந்தவையின் அருகில் வந்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நான் பறவையானால்



நான் பறவையானால் எனது இரு சிறகுகளையும் விரித்துக்கொண்டு வான் வெளியில் பறப்பேன். என்னை கண்டிப்பாரும் இல்லை. தண்டிப்பாரும் இல்லை. நான் சுதந்திரமாக எங்கும் பறப்பேன்.

நான் பறவைகளோடு கூடி வாழ்வேன். எங்களிடையே போட்டி பொறாமை இருக்காது. நான் ஒரு பறவையானால் அதிகாலையில் துயிலெழுப்பி மனிதர்களின் தூக்கம் கலைப்பேன்.

வானளவு உயர்ந்த கோபுரங்களின் உச்சியில் அமர்ந்து எனது சூழலை இரசிப்பேன். எனக்கு பசிக்கும் போதெல்லாம் பழங்களையும் தானியங்களையும் உண்பேன்.

எனக்குத் தாகம் எடுத்தால் நீரூற்றுக்களிலும் குளங்களிலும் நீர் அருந்துவேன். வேட்டையாடுபவர்களின் கண்களில் அகப்படாமல் சுதந்திரமாய் பறந்திடுவேன். எனக்கு கிடைத்த இந்த அழகிய வாழ்வை நான் அனுதினமும் கொண்டாடித் தீர்ப்பேன்.

இயற்கையை இரசிப்பதும் அதனோடு வாழ்வதும் எனக்குக் கிடைத்த பெரிய வரமாகக் கருதுவேன்.

இந்த உலகில் பிறந்த மனிதர்களுக்கு இந்தப் பரந்த வானில் கவலைகளை மறந்து, பறந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை இல்லாமல் யார் இருக்க முடியும்.

நான் ஒரு பறவையானால் கவலைகள் இன்றி இந்த சுதந்திர வானில் சிறகடித்து இயற்கையோடு பறப்பேன்.

நாம் எந்த உணவையும் பகிர்ந்து உண்போம் அதனால் எங்களைப் பற்றி மனிதர்கள் சிறுவர்களுக்கு கூறுவார்கள்.

ஆர்.சதுர்சிகா,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவைப் புறந்தள்ள இலங்கையால் முடியாது

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது சஜித் பிரேமதாஸவுக்கே இந்தியா ஆதரவு வழங்கியது.

எனினும் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றார். அநுரவின் வெற்றியை முதலில் வாழ்த்திய நாடு இந்தியா.

இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா உடனடியாக ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து இந்தியாவின் சார்பில் அவருக்கு மலர்ச்செண்டு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அவசர அவசரமாக இலங்கைக்கு வருகைதந்து, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்து வாழ்த்தி யதுடன் இந்தியாவுக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார்.

பொதுவில் இந்தியா மீது அவ்வளவு உடன்பாட்டைக் கொண்டிராத ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை இந்தியா மிக இலாவகமாகக் கையாண்டது.

ஆம், அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்பான அவரது முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியாவாகவே இருந்தது.

இந்தியாவுக்குச் சென்ற அநுர குமார திஸாநாயக்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமோக வரவேற்பு வழங்கினார்.

அந்த வரவேற்பு ஜனாதிபதி அநுரவை நெகிழ வைத்தது. ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா சஜித் பிரேமதாஸவை ஆதரித்திருந்தாலும் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து எந்தவித மனக்கிலேசமும் இல்லாமல், இந்தியா தனக்கு வழங்கிய மிக உயர்ந்த கௌரவத்தை – வரவேற்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அநுர, இந்தியாவை மீறி வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்துவது ஒருபோதும் சாத்தியமாகாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்.

அதாவது அண்டை நாடான இந்தியாவை பகைப்பதோ அன்றி ஊசாடாமல் தவிர்ப்பதோ இலங்கைக்கு நல்லதல்ல என்ற மெய்ப்பொருளை உணர்ந்து கொண்ட ஜனாதிபதி அநுர; இந்தியாவுடன் இணங்கிப் போவது தான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தார்.

ஜனாதிபதி அநுரவின் இந்த முடிவு இந்தியப் பயணத்தின்போது எடுக்கப்பட்டதாயினும் அது புத்திசாலித்தனமான முடிவு என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அதேநேரம் உலகநாட்டுத் தலைவர்களை வாலாஜப்படுத்துவதில் கைதேர்ந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இப்போது ஜனாதிபதி அநுரவுடன் சேர்ந்து இந்திய – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளார்.

ஏப்ரல் 5ஆம் திகதி இடம்பெறும் இவ் ஒப்பந்தம், காலக்கிரமத்தில் இலங்கையிலிருந்து சீனாவை அந்நியப்படுத்தும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# ஈஸ்டர் குற்றவாளிகளை வெளிப்படுத்த அநுர நல்ல நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறாரா?

## உதய கம்மன்பில கேள்வி

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு பின்னர் அரசாங்கத்துக்கு எதிராகப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வீதிக்கு இறங்குவதைத் தடுப்பதற்காகவே ஏப்ரல் 21க்கு முன்னர் உண்மையை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உண்மையை வெளிப்படுத்த சுபநேரம் பார்க்க வேண்டுமா? என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சர்வஜன சக்தி கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சிக்கு வந்தவுடன் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மையைப் பகிரங்கப் படுத்துவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்.

இந்த மாதம் 21 ஆம் திகதிக்குள் உண்மையை பகிரங்கப்படுத்தாவிடின் அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்குவதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்துக்கு எச்சரிகை விடுத்திருந்தார்.

அரசாங்கத்துக்கு எதிராகப் பேராயர் வீதிக்கு இறங்குவதைத் தடுப்பதற்காகவே 21 ஆம் திகதிக்கு முன்னர் குண்டுத்தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

குற்றத்தின் உண்மையை வெளிப்படுத்த சுபநேரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இருப்பினும் அந்த அறிக்கைகளின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஜனாதிபதி வெளிப்படுத்தும் உண்மையில் உள்ள பொறுப்புதாரி யார் என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-4,7)

# பெற்றோல் விலை குறைந்தாலும் ஆட்டோ கட்டணத்தில் மாற்றமில்லை

## முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம்

பெற்றோல் விலை 10 ரூபாவில் குறைக்கப்பட்ட போதிலும் முச்சக்கர வண்டி கட்டணங்களைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டணங்களைக் குறைப்பதற்குப் பதிலாக, பொது மக்களுக்கு மிகவும் சிறந்த சேவையை வழங்குவதற்காக முறையான விதிமுறைகளை செயற்படுத்துவதில் அரசாங்கம் கவனம்செலுத்த வேண்டும் என சங்கத் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோல் விலை லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாய் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளதால் கிலோமீற்றர் ஒன்றுக்கு 50 சதம் குறைப்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,7)

# எரிபொருள் விலையை மேலும் குறைக்க முடியாது

## அமைச்சர் கிரிஷாந்த

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதால், எரிபொருள் விலையை மேலும் குறைக்க முடியாது என அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்துரைத்த அமைச்சர்,

எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என்று நாங்களும் விரும்புகிறோம். ஆனால் இப்போதைக்கு அதை செய்ய வழியில்லை. ஏனென்றால், நாங்கள் இன்னும் IMF நிபந்தனைகளுடன் இருக்கிறோம். எங்கள் வருமானத்தையும் செலவையும் ஆராய வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் இருக்க வேண்டும். ஒரேயடியாக விலையைக் குறைப்பது கடினம். நாங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பக்கம் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்தியப் பிரதமர் இங்கு வரும் போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பாகன ஒப்பந்தங்களை நோக்கியே செல்லவுள்ளோம். அப்படி சென்றுதான் எங்களால் மின்சாரக் கட்டணத்தை குறைக்க முடியும். எரிபொருளுடனும் எங்களுக்கு ஒரு சமநிலைப்படுத்தல் செய்ய வேண்டியிருக்கிறது. இதை IMF-ம் அறிந்திருக்கிறது. ஒரேயடியாக அந்த இடத்திற்குச் செல்ல முடியாது. ஆனாலும், அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் பல முறை எரிபொருள் விலையைக் குறைத்திருக்கிறோம். இந்த முறை 10 ரூபாயால் குறைத்திருந்தாலும், இதற்கு முன்பும் அரசாங்கம் பல்வேறு அளவுகளில் விலையை குறைத்துள்ளது என்றார். (ம-4,7)

# செய்தியில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் (31) முல்லைத்தீவு நாயாறு கடலில் மூழ்கி யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருட்டுமடுவைச்சேர்ந்த சிவகுமார் விதுஷிகா என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் நேற்றைய வலம்புரியின் முன் பக்கத்தில் வெளிவந்த செய்தியில், தவறுதலாக இரண்டு யுவதிகள் உயிரிழந்ததாகச் செய்தி வெளியாகியிருந்தது.

குறித்த செய்தியால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகிறோம். (ஆ-ர்)

# சங்காபிஷேகம்

இருபாலை தென் கோவை அருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான மணவாளக்கோல சங்காபிஷேகமானது நாளை வியாழக்கிழமை (3)காலை முதல் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது

காலை 07.00 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி விசேட திரவிய அபிஷேகத்தைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு கற்பகப்பிள்ளையாருக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் கலச சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேட பூஜை ஆராதனைகளுடன் வசந்தமண்டபப் பூஜை, திருஊஞ்சல் என்பன நடைபெற்று கற்பக விநாயகப்பெருமான் திருவீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 மார்ச்: உலகப் பூச்சியக்கழிவு தினம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மார்ச் மாதம் 30ஆம் திகதியை உலக பூச்சியக்கழிவு தினமாக (International Day of Zero Waste) ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கழிவுகளேதுமற்ற தினமாக கொண்டாடப்படுகின்றது.

நாம் பயன்படுத்தியது போக அனைத்துமே கழிவாக மாற்றப்படுகின்றது. தேவைக்கதிகமென்பதால் நல்லவைகளும் கழிவுகளாக மாற்றப்படுகின்றன. ஆனால் அதற்கு தேவை இன்னொரு இடத்தில் இருக்கும். உணவாக உற்பத்தி செய்யப்பட்டவை சமனாக பகிரப்படாததனால் இந்த நிலை. கழிவுகளை மீள்சுழற்சி செய்தால் எமக்கு தேவையான அநேகமான உள்ளீடுகளை பெறுவதற்கு வாய்ப்புக்களுண்டு.

கழிவுகளில் பலவகைகள் உண்டு. திண்ம, திரவ, சேதன, பாதகமான மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் என்பன இதிலடங்கும். இக்கழிவுகளுள் குறிப்பிட்ட சதவீதத்தைத் தவிர ஏனைய அனைத்தும் மீள்சுழற்சி செய்யக்கூடியன. கழிவுகளை வெறுமனே அவற்றிற்கு பெறுமதி இல்லையென்று தவிர்த்து விடுவதனை விட அவற்றை இன்னொரு பொருளாக்கக்கூடிய பெறுமதி மிக்கதாக மாற்றிவிடும் புத்தாக்கங்கள் அவசியம் தேவை. மீள்சுழற்சி செய்வது மீளுருவாக்கம் செய்வது வேறொரு பொருளாக உருவாக்குவது என்பன இதிலடங்கும்.

விவசாயத்தில் கழிவென்று வரும் பொருட்களை இன்னொன்றின் உற்பத்திக்கு உள்ளீடாகப் பயன்படுத்தினால் அனைத்தும் பெறுமதி மிக்கதாக மாறிவிடும்.

விவசாயச்செய்கை என்பது மீள்சுழற்சி (Recycling) வட்டமாகவே கணிக்கப்படல் வேண்டும். இயற்கையாகக் கிடைக்கின்ற வளங்களை வைத்தே விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் உற்பத்தியதிகரிப்பு என்னும் போர்வையில் அசேதன உள்ளீடுகள் உள்வாங்கப்பட்ட காலத்திலிருந்த விவசாயச் செய்கையில் மாற்றங்களும் பாதிப்புக்களும் ஏற்படத் தொடங்கிவிட்டன. மீள்சுழற்சி என்பதுவும் கேள்விக்குறியாகி விட்டது.

விவசாயச் செய்கையில் பயன்படுத்தப்படும் விதைகள், நடுகைப் பொருட்களுடன் உள்ளீடுகளாக சேதனப்பசளைகளே பயன்பாட்டிலிருந்தன. இப்போதும் பலவிவசாயிகள் சேதனப் பசளைகளையே பயிர்களுக்கு உள்ளீடாக பயன்படுத்துவதுடன் விளைச்சலாக பெறப்பட்ட இலைகள், தானியங்கள், காய்கள், கனிகள் என்பனவற்றை விட பயிர்மீதிகள் விலங்குணவாக பயன்படுத்தப்படுகின்றன. விலங்குணவாக பயன்பட்டவை போக மீதியானவை சேதனப் பசளையாக மாற்றப்படுகின்றன.

சேதனப் பசளையாக மாற்றுவதில் மண்புழுத் தொழில்நுட்பம் கைகொடுக்கும். தேவைக்கேற்றளவில் சமையலறைக் கழிவு, வயற்கழிவுகளை மண்புழுக்களின் உதவியுடன் மண்புழு உரமாக மாற்றப்படும். மண்புழு உரத்திலிருந்து மண்புழுத் திரவம் மற்றும் மண்புழுஉரதேநீரும் பெறப்படும். இவ்வாறான வழிகளில் சேதன உரங்கள் தயாரிக்க முடியும். இவற்றுடன் கால்நடைகளின் சிறுநீர் (குறிப்பாக மாட்டு சிறுநீர்) குறிப்பிட்ட நாட்களில் நொதிக்க வைத்து அவற்றை தழைச்சத்துக்கு ஈடாகப் பயன்படுத்த முடியும். மிளகாய் செய்கையாளர்கள் இவ்வாறு நொதித்த மாட்டு சிறுநீரை நேரடியாக இலைகளுக்கு விசுறுதல் ஆகாது என்பதனால் அதனை நீரில் ஐதாக்கி (ஒரு லீற்றரை பத்து லீற்றர் நீரில் கலந்து) மிளகாய் பயிர்களுக்கு விசிறுவர். இதனால் மிளகாயில் சேதத்தை உண்டுபண்ணும் பனிப்பூச்சிகளை இலகுவாக கட்டுப்படுத்திவிடலாம். தற்போது உஷ்ணகாலமாகையால் மிளகாய் செய்கையில் உள்ளவர்களுக்கு பனிப்பூச்சியின் தாக்கம் மிளகாய் பெருத்து வளர்வதனைப் பாதிக்கும். பனிப்பூச்சியின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டால் மிளகாய் செய்கை பாதிப்படையவும் வாய்ப்புண்டு.

மனைகளில் தொழில் செய்யும் இடங்களில் [illegible] சேதன கழிவுளை மண்புழுக்களைப் பயன்படுத்தியும் கறுப்பு சிப்பாய் இலையானை ( Black soldier fly) பயன்படுத்தியும் சேதன பசளையாக மாற்றிக் கொள்ளலாம். இவற்றை விட பலவகை நன்மை தரும் நுண்ணங்கிகளையும் பயன்படுத்தி அதாவது வினைத்திறனான நுண்ணங்கிகளை (Effective microorganisms) பயன்படுத்தியும் சேதன பசளையக்கிக் கொள்ளலாம். இவற்றை விட சேதனப் பொருட்களை உக்கி, மக்க வைப்பதற்கு பயன்படுத்தப்படும் ரைக்கோடேர்மா பூஞ்சணத்தையும் வளர்த்து சேதன பசளையுடன் கலந்து பயிர்களுக்கு இடலாம். இவற்றைவிட கிடைக்கின்ற கழிவுகளிலிருந்து வளர்க்கப்படும் நன்மை தரும் பூஞ்சணங்கள் அல்காக்கள் என்பனவற்றையும் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த முடியும்.

கால்நடைகளிலிருந்து பெறப்படும் சாணம் மற்றும் அவற்றின் மீதிகள், கழிவுகள் என்பன மண்புழு மற்றும் கறுப்பு சிப்பாய் இலையான் என்பனவற்றை வளர்ப்பதற்கான சிறந்த ஊடகமாக பயன்படுத்துகின்றனர். ஆக திண்ம கழிவுகளை மீள்சுழற்சி செய்வது இலகுவானதாகவும் அவற்றை சிறந்த பசளையாகவும் பயன்படுத்த முடியும். திரவ கழிவுகள், வைத்தியசாலைக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளுள் மீள்சுழற்சி செய்யப்பட முடியாதனவற்றை முறையாக, பாதுகாப்பாக அகற்ற வேண்டும் அல்லது அவற்றை இடுபொருளாக பயன்படுத்தி வேறு பொருட்களை உருவாக்க முயற்சி செய்தல் வேண்டும். மாணவர்களை, இளையவர்களை இத்தகைய புத்தாக்க கண்டுபிடிப்புக்களுக்கு ஊக்குவிக்கலாம்.


நகர்ப்புறக் கழிவுகளை முறையாக மீள்சுழற்சி செய்வதற்கான அணுகுமுறைகள் பல இருந்தும் பல நகரங்களில் இவ்வாறான கழிவுகளை இயற்கை பிரிந்தழிதல் மூலம் சேதனஉரமாக மாற்றும் செயன்முறைகள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புற கழிவுகளில் 85 சதவீதம் சேதன கழிவாகவே இருக்கின்றது.

வினைத்திறனான வகையில் தரம்பிரித்து அவற்றை முறையான நடைமுறைகளுக்கூடாக சேதன பசளைகளாக மாற்றும் செயற்றிட்டங்களை உள்ளீர்க்க வேண்டும். நுண்ணுயிர்களை பயன்படுத்தி சேதனக் கழிவுகளாக மாற்றுதல் பயனுள்ளதாக அமையும். நகர்ப்புற கழிவுகளில் மனைகளிலிருந்து உருவாகும் கழிவுகளை மனைகளிலேயே மீள்சுழற்சி செய்தல் சிறந்ததாகும். நகர்ப்புறத் தோட்டங்கள் அமைக்கும் போது இவ்வாறான சேதன கழிவுகளை உருவாக்குதல் சிறந்த தோட்டங்களை உருவாக்க வாய்ப்பளிக்கும்.

பாதகமான கழிவுகளை அவற்றின் நஞ்சுத்தன்மையை முறையாக அகற்றி அவற்றை எந்த உயிரினத்திற்கும் பாதிப்பில்லாதவாறு அகற்றிவிடல் வேண்டும். இந்த நடைமுறை ஒவ்வொரு நாடுகளின் சட்ட திட்டங்களுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும். ஆனால் அணுக்கழிவுகளை யூரோனியக் கழிவுகளை கடலில் கொட்டும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதனால் கடலில் காணப்படும் உயிரினங்களுக்கு பாதிப்பு நிச்சயமாக உண்டாகும். இவற்றுக்கும் மேலாக வளர்ந்த நாடுகளில் உலகசந்தையில் பொருட்களின் விலை குறைந்து விடாதிருக்க உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பொருட்களையும் கடலில் கொட்டும் நிகழ்வுகளுமுண்டு.

இவையெல்லாவற்றையும் தாண்டி தற்போது அதிகரிக்கும் இலத்திரனியல் கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அதில் பயன்படுத்தப்படும் உலோகங்களை வேறுபிரித்தெடுத்து மீள்சுழற்சிசெய்கின்றனர். இருப்பினும் மீள்சுழற்சிக்குட்படாத கழிவுகள் பாதுகாப்பாக அகற்றப்படுகின்றன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருக்குலைந்த...

புளியங்குளம் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதாக அயலவர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலத்திற்கு அருகேயுள்ள வயல் வெளியில் சேட் ஒன்றும் காணப்படுவதுடன், குறித்த சடலம் ஐந்து தொடக்கம் பத்து நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், பதில் நீதவான் த.ஆர்த்தி அவர்களும் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ம-7,4,250)

## சிரேஷ்ட...

கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் நிறுவன மயப்படுத்தப்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிரஜன் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக உட்காயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது பீடத்தைச் சேர்ந்த புதுமுக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம். சம்பவம் தொடர்பாக அறிந்தவுடன் பல்கலைக்கழக சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருடன் நானும் வைத்தியசாலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மாணவனை நேரில் பார்வையிட்டதுடன், வைத்திய நிபுணர்களிடமும் கலந்துரையாடினோம்.

பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோரிடமிருந்தும், மாணவனிடமிருந்தும் பெறப்பட்ட முதற்கட்டத் தகவலின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பகிடிவதை மற்றும் மாணவர் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை, பல்கலைக்கழக உபவிதிகளுக்கு அமைய, கிடைக்கப்பெறும் விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் ஊடாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். பேரவைத் தீர்மானத்துக்கமைய குற்றமிழைத்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சம்பவம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே இடம்பெற்றிருப்பதனால் பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை வழங்கிய முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சட்டநடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழகம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றார். (ம-7)

## யாழ்ப்பாண...

அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலை மாணவன் மீதான பகிடிவதை தொடர்பில், பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயமானது 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையின் அடிப்படையில் கவனம் செலுத்தியுள்ளது.

1998ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம், பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும் பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

மேலும் பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மேற்குறித்த பகிடிவதைச் சம்பவம் தொடர்பில் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் 4ஆம் திகதிற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர், கோப்பாய்பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என குறித்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,4)

## ஜுன், ஜூலை...

குறைப்புத் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பெற்றோல் உள்ளிட்ட எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. தற்போது எரிபொருளின் விலை குறைக்கப்பட்டிருப்பினும் ஜுன், ஜூலை மாதங்களில் வருடாந்தப் பேருந்துக் கட்டண அதிகரிப்புக்கமைய குறிப்பிடத்தக்களவில் பேருந்துக் கட்டணம் உயரும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சருடன் விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது. இதன் போது ஜூலை மாதம் பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்படும் என அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்திருந்தோம்.

தனியார் பேருந்துகள் உரிமையாளர் சங்கத்தின் கொள்கைகளின் அடிப்படையில் பேருந்துக் கட்டணம் குறைக்கப்படும்.

எனினும் பேருந்து இறக்குமதிக்கு அரசாங்கத்தால் வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாம் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறோம்.

இதனால் பேருந்துக் கொள்வனவுக்கான விலை அதிகரிப்புக்கு நிகராக பேருந்து உதிரிப்பாகங்களுக்கான விலைகளும் அதிகரித்துள்ளன.

ஆகையால் 12 பிரதான காரணங்களின் அடிப்படையில் வருடாந்த பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட உள்ளது. தற்போதும் 3 ரூபாய் நட்டத்துடன் பேருந்துச் சேவைகள் செயற்படுத்தப்படுகின்றன என்றார். (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 5793 — D 3 6 3 4 6 0
அத சம்பத — D 3 4 6 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0368 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் - 1823 — R 32 47 51 61 R — Double Chance 78093

மெகா பவர் — திகதி 01/04/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2141 — P 23 02 10 41 61

ජය JAYA — திகதி 2025.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 061 — G 4 2 0 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4035 — சீட்டிழுப்பு திகதி 01.04.2025 — T 34 53 63 65 — T

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.04.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1102 — துலாம் 01 21 24 25 துலாம் — 98922 — 30

சுப்பர் மில்லியன் (DLB) — உத்தியோகபூர்வ முடிவுகள் — 01.04.2025 — வெற்றி வாரம் 501 — N 8 8 8 3 6 8 — 68888 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,741,726.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2767 — சீட்டிழுப்பு திகதி 2025.04.01 — தினம் செவ்வாய்க்கிழமை — 35 42 47 54 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,915,598.40

சனிதா — திகதி 01.04.2025 — வெற்றி வாரம் 4928 — 06 52 58 72 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,116,327.60 — ரூ.100,000/- 70993

சசிரி — வெற்றி வாரம் 655 — 01.04.2025 — செவ்வாய்க்கிழமை — 09 22 23 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4479 — சீட்டிழுப்பு திகதி 01.04.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 06 17 22 46 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — 170782

லக்ஸ்பத — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Y 13 07 15 42 53 — 1943 — 01.04.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,510,706.00

அட கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2593 — சீட்டிழுப்பு திகதி 2025.04.01 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,870,607.20 — 13 30 62 65 Z — 346338

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**உரும்பிராய் வடக்கில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,200,000 (பன்னிரண்டு இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1 ½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

(3820)

**076 990 3039 / 077 468 3354**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி (Main Road) 20,00 000/= காணியின் பின்பகுதி 2ம் துண்டு 15, 00 000/= பின்பகுதி 3ம் காணி ஒரு பரப்பு 10, 00 000/= ரூபா.
- நெல்லியடி பஸ்நிலையம் 2½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 மணி வரை)

(3820)

தொடர்புகளுக்கு:

**076 935 3971 / 076 987 8617**
**076 860 2770**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2598)

**076 825 7716** (ஆகாஸ்)

## A/L - 2027
## கலை, வர்த்தகம்

05.04.2025 (சனி) காலை 9 மணி

**DMI** யாழ். நகர்

(3751)

**077 848 0604**

**கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் அபிவிருத்தி நிலையம்**

## பராமரிப்பாளர் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பெண்கள் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.

- 25 - 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
- தகைமை:- க.பொ.த(உ/த) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது சிறுவர் பராமரிப்புத் தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(3810)

தொடர்புகளுக்கு:

**0777 112 269, 077 361 1301**


## TIN இலக்கம் கட்டாயம்

மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்படும் அனைத்து சேவைகளுக்கும் TIN இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மோட்டார் போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும் மோட்டார் வாகனங்கள் தொடர்பான அனைத்துச் சேவைகளுக்கும் 2025 ஏப்ரல் 15 முதல் TIN எண்ணைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ம-4,7)


## INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Digital Economy*

MPCS Building
127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

APRIL BATCH

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in information Technology
- Dip.in Computer Programming

-06 Month-

Online Course

- Dip.in PC Application & Office Management

-06 Month-

Languages

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AotoCAD

-06 Month-

Workshops

- Internet & e-mail
- Webpage Designing & Development

-20 Hours-

(C-2599)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 21.04.2025
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 19.04.2025

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

- OFFICER IN CHARGE -

## K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில்
(ஐயப்பன் கோவில் அருகில்)

**A.L - 2027 வர்த்தகப்பிரிவு**

ஆரம்பம் : 06.04.2025
ஞாயிறு 2.30 p.m

பொருளியல் : S.Jeyakumar
கணக்கீடு : A.T. Suren
வணிகக்கல்வி : T.S. Richi

(3798)

தொடர்பு : **077 723 8597**

## இணைந்த கணித வகுப்புக்கள்

ஆசிரியர் ஐங்கரனின் வழிகாட்டலில் A/L (2027) புதிய பிரிவிற்கான ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலமான Combined Mathematics (இணைந்த கணிதம்) வகுப்புக்கள் ஆரம்பம்

காலம்: 04.04.2025 நண்பகல்: 12.00 மணி

தொடர்புகளுக்கு: **077 628 4845**

EP Academy www.epacademy.lk
No:354,1/1,Clock Tower Road, Jaffna.

## DCM - யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2027

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் – 06.04.2025 (ஞாயிறு) 9.00 Am

நிர்வாகம் : 077 778 9815

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(3793)

## 2027 Advanced Level
KBK ZOOM CLASSES



**கணக்கீடு ACCOUNTING**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Tamil Medium

ஆரம்பம் :- இன்று 02.04.2025
Wed 9 pm - 10 pm
Sat 8.30 pm - 9.30 pm

- Theory Classes
- Paper Classes
- Model Exams
- Flexibile Time Table
- உங்களின் வசதிக்கேற்ப மாலை நேர, இரவு நேர வகுப்புக்கள்

வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்

அதிகூடிய A மற்றும் B சித்திகள்
உங்கள் KBK உடன் இணைந்தால் மட்டுமே

**Mr.K.BALAKAJEN SLTS**

A/L 2025, 2026 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

CONTACT US 077 4520043
Rank 01 (2018, 2022 - Jaf, 2023-Kil)

(C-2593)

## வேலையாட்கள் தேவை

உடுவிலில் உள்ள
அரைக்கும் ஆலைக்கு
அனுபவமுள்ள
வேலையாட்கள் தேவை.

(C-2597)

**077 077 2946**
**075 056 7178**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-2596)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.